அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில், அரியலூர் தெற்கு ஒன்றியம், ஆலந்துறையார்கட்டளை ஊராட்சி கீழகாங்கேயனூர் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுக் கட்சித் தோழர்கள் 50 க்கும் மேற்பட்டோர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய பொறுப்பாளர்கள் மா.அன்பழகன், தெய்வ. இளையராஜா,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

"ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த வேண்டும்!

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. - அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல் ஜூன் 12 -

நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் கூட்டரங்கில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணி மாறன் தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம், கே.பொன்னுசாமி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்துகொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார்.

இக்கூட்டத்தில் கடந்த 07.06.2025 அன்று கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டத்தில் 'ஓரணியில் தமிழ் நாடு' உறுப்பினர் சேர்க்கை குறித்தும், பூத் வாரியாக தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் (பூத் டிஜிட்டல் ஏஜென்ட்) நியமிப்பது குறித்தும், ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக கிளை, வார்டுகளில் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம் குறித்தும் ஆலோசனைகள் செய்யப்பட்டது.

கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள் நன்னியூர் ராஜேந்திரன், முனவர் ஜான், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட, மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், நகர் மன்ற, பேரூர் மன்ற தலைவர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்!

பெரம்பலூர்,ஜூன்.12-

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில், ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் பெரம்பலூர் வெங்கடேச புரம் பகுதியில் உள்ள தனியார் அரங்கில் நடை பெற்றது.

மாநில இளைஞரணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அழகிரி சதாசிவம், திராவிட இயக்க எழுத்தாளர் டான் அசோக் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியம், டி.ஆர். சிவசங்கர், மா.பிரபாகரன், ஒன்றியம், நகரம், பேரூராட்சிகளுக்கு புதிதாக நிர்வகிக்கப்பட்ட, அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு, கட்சி வரைமுறைகள் மற்றும் அமைப்பாளர்களுக்கான பணிகள் குறித்தும் கட்சியின் வளர்ச்சி குறித்தும் எடுத்துரைத்து பேசினார்கள். இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் நகராட்சி, மற்றும் பெரம்பலூர், வேப்பந்தட்டை, ஆலத்தூர், வேப்பூர், ஆகிய ஒன்றியங்கள், மற்றும் குரும்பலூர், அரும்பாவூர், பூலாம்பாடி, லப்பைகுடிக்காடு ஆகிய பேரூராட்சி சேர்ந்த இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருநின்றவூரில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

திருவள்ளூர், ஜூன், 12-

திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் காக்களூரில் இலவச கண் கண்ணொளி திட்டத்தின் கீழ் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் ஆர். ஜெயசீலன் தலைமை தாங்கினார். பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ் முன்னிலை வகித்தார். இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர், பூந்தமல்லி எம்எல்ஏ., ஆ.கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு கண் சிகிச்சை முகாமை தொடங்கி வைத்தனர்.

சென்னை உமா கண் மருத்துவமனை சார்பில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமின் போது குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை கண் பரிசோதனை செய்து கொண்டனர். இதில் கிட்டப் பார்வை, தூரப்பார்வை உள்ளவர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு பயனாளிகளுக்கு இலவச கண்ணாடியும் வழங்கப்பட்டது.

இதில் ஒன்றிய கழக நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், கே.தரணி, டி.கே.சீனிவாசன், டி.எம்.ராமச்சந்திரன், எஸ்.பரமேஸ்வரன், டி.டி.தயாளன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் -13

ம. அ. 13. ந. க. எண். சி2/2548/2025

e-மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழ்கண்ட பணிக்கு உதவி ஆணையர் (பொ) / ம-13 அவர்களால் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது :

2024 - 25 ம் ஆண்டு தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி
மண்டலம்-13, பகுதி-39, வார்டு-176ல், ராம் நகர் வடக்கு 1வது தெரு விரிவில் அமைந்துள்ள விளையாட்டு திடலில் உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி

பணியின் உத்தேச தொகை ரூ. **82,91,666.66** லட்சம்	ஒப்ப முன் வைப்புத் தொகை ரூ. **83,000** ஆயிரம்
ஒப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **26.06.2025** அன்று பிற்பகல் **3.00** மணி வரை	
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **27.06.2025** அன்று பிற்பகல் **3.30** மணி	

செ.ம.தொ.இ / 2932 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **உதவி ஆணையர் (முதுநிலை) (பொ) / ம-13**

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர பொறியியல் துறை

இ. பொ. து. ந. க. எண். எம்1/0709/2025

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது.

8 எண்ணிக்கையில் இயற்கை எரிவாயு **(CNG)** மூலம் இயங்கும் கால்நடைகளை பிடிக்கும் வாகனங்களை கொள்முதல் செய்யும் பணி
முன்வைப்பு தொகை: ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி
ஒப்பம் சமர்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **26.06.2025** பிற்பகல் **3.00** மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் : **27.06.2025** பிற்பகல் **3.30** மணி
மேலும் விவரங்களுக்கு **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்

செ.ம.தொ.இ / 2933 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **கண்காணிப்பு பொறியாளர் (இ)**

சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியபட்டினம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு உடையாபட்டி கந்தாஸ்ரமம் வாசவி முதியோர் இல்லத்திற்கு காலை உணவு, கருமாபுரம் ,மேட்டுப்பட்டி, எம். பெருமாபாளையம் ,சுக்கம்பட்டி, ஆச்சாங்குட்டப்பட்டி, ஆகிய ஊராட்சிகளில் உள்ள அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம் அன்னதானத்தை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான ஏ. விஜயகுமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் ஹரி அய்யாதுரை, மாவட்ட பிரதிநிதி குமரவேல், சின்னத்தம்பி , இன்பராசு, பேரூராட்சி தலைவரும் பேரூர் செயலாளருமான பாபு (எ) செல்வராஜ் , மற்றும் ஒன்றிய, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர்,தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் நவலடி ராஜா ஏற்பாட்டில் சங்கர கந்தசாமி கண்டர் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, ஒரு லட்சம் மதிப்பில் தலா ரூ. 1000 மதிப்பில பள்ளி குழந்தைகளுக்கு புத்தாடைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் பி பி தனராசு, கே.கே. சண்முகம், பேரூர் கழக செயலாளர்கள் முருகன், கருணாநிதி, பெருமாள், வழக்கறிஞர் செல்லப்பா செந்தில், சார்பு அணி நிர்வாகிகள் ஆர். பாலாஜி, பூக்கடை சுந்தர், மகிழ் பிரபாகரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு கடலில் மீன் படகுகளைக் கொண்டு உதயசூரியன் சின்னம்!

நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பார்வையிட்டார்!

நாகை, ஜூன்.12-

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் நாட்டில் முதன் முதலில் மீனவர்களுக்கு கான்கிரீட் இலவச வீடு வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழைப் போற்றும் வகையில் 2026 சட்ட மன்ற தேர்தலில் மீண்டும் வெற்றி வாகை சூட உள்ள சின்னமான உதயசூரியன் சின்னத்தை கடலில் படகுகளை கொண்டு உருவாக்கப் பட்டு பொதுமக்களுக்கு காட்சிபடுத்தப்பட்டது.

இதையடுத்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் கடலுக்கு சென்று மீன் பிடி படகுகள் கொண்டு உருவாக்கப்பட்ட உதயசூரியன் சின்னத்தை பார்வையிட்டார். நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. ராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், நாகை வடக்கு ஒன்றியச் செயலாளர் சிக்கல் என்.ஆனந்த், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பாலமுரளி, மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் என். மோகன்தாஸ் மற்றும் மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள், உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். பின்னர் செய்தியாளர்களுக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கூறுகையில் கடற்கரையில் வாழழும் மீனவர்களுக்கு முதன் முதலில் இலவச கான்கிரீட் வீடு பூம் புகாரில் தான் கட்டி கொடுத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவர். இலவச கான்கிரிட் வீடு கட்டிக் கொடுத்த தலைவர் கலைஞர் என்பதை நினைவு படுத்தும் வகையில் மீனவர்களால் மீன் பிடி படகுகளை கொண்டு கழகத்தின் வெற்றிச் சின்னம் உதயசூரியனை உருவாக்கப்பட்டது. கலைஞர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த மீன் பிடி தடை காலத்தை உதவித் தொகை உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை கலைஞர் கொண்டு வத்தார். நாகை அக்கரைப்பேட்டையில் ரூ. 81 கோடிக்கு மீன் இரங்கு தள விரிவா திட்டத்தை அறிவித்து தற்போது பணிகளை நிறைவு பெறும் வகையில் உள்ளது. மீன் பிடி தடைகாலத்தில் நிவாரண தொகை அறிவித்தவர் கலைஞர் அவர்கள் தான். மீனவர்களுக்கு நல வாரியமும், மீன் வளர்ச்சி கழகத்தை கொண்டு வந்த தலைவரின் புகழை கொண்டாடும் வகையில் கழகத்தின் வெற்றி சின்னமான உதயசூரியரை கடலில் வடிவமைக்கப்பட்டது. கடலில் வடிவமைத்த மீனவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

பெரம்பலூர் மாவட்டத்தில்

புதிய நூலக கட்டிடத் திறப்பு விழா!

எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர்,ஜூன்.12-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் அருகில் 10.06.2025 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் 1.85 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சென்னை புத்தகப் பூங்கா, பொது நூலக இயக்ககம் சார்பில் 29.80 கோடி ரூபாய் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ள 110 இடங்களில் கூடுதல் நூலகக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள். இதில் பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நூலகத்தையும் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வினை தொடர்ந்து பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை பார்வையிட்டு, குத்து விளக்கேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

பொதுமக்கள் மற்றும் மருத்துவமனைக்கு வருகை புரிபவர்கள் பயன் பெறுவதற்காக இந்நூலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் நகர மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், இந்திய தொழில் சங்க தலைவர் ஈஸ்வரன், பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் கலா, டாக்டர் சரவணன், டாக்டர் விஜயன், ரத்த பரிசோதனை அலுவலர் வசந்த், நூலகத் துறை அலுவலக பணியாளர்கள் மற்றும் நூலகர்கள், மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்தநாள் விழா!

அறுசுவை உணவை சு.ப.தமிழழகன் வழங்கினார். பாவை ஹனீபா ஏற்பாடு!

தஞ்சாவூர் ஜூன்.12-

தஞ்சை வடக்கு மாவட்டம், பாபநாசம் பேருந்து நிறுத்தம் அருகில் முத்தமிழறிஞரின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பாக அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தலில், பொது மக்களுக்கு அறுஞ்சுவை உணவு வழங்கினார்கள்.

தஞ்சை வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பாக முத்தமிழ் அறிஞர், செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடும் வகையில், தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி ஆலோசனையின் பேரில், மாவட்ட துணைச் செயலாளர் கோவிஅய்யாராசு தலைமையில் மாவட்ட துணைசெயலாளர் எஸ். துரைமுருகன் முன்னிலையில் தினமும் வழங்கும் நீர்மோர் மற்றும் இளநீர் உடன் பொதுமக்களுக்கு அறுச்சுவை பிரியாணியை குடந்தை மாநகரச் செயலாளர் கும்பகோணம் துணை மேயர் சு.ப. தமிழழகன் வழங்கினார்.

இதில் மாவட்ட மீனவரணி அமைப்பாளர் புகழேந்தி, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு து.அமைப்பாளர் ராயல்அலி, இளைஞரணி காளிதாஸ், வளத்தாமங்களம் சுரேஷ், குடந்தை ராஜா, அய்யம்பேட்டை பிரகாஷ், ஹக்கீம்ராஜா, ஒன்றிய பிரிதி நிதி ஜெயக்குமார், வார்டு செயலாளர் சேகர், இளைஞரணி து.அமைப்பாளர் தஞ்சை பிரகதீஷ், வீரமணி, சிவராஜ், விக்கி, கவி, நஸிர், கிட்டாக் ஆசிக், நிஜாத் ஜுபைர் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு தெற்கு மாவட்டம் கருங்கல்பாளையம் பகுதி கழகம் 39வது வட்டத்தில் முத்தமிழறிஞர் செம்மொழிக் காவலர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துச்சாமி வழிகாட்டுதலின்படி கேபிள் ஆர்.செந்தில்குமார் ஏற்பாட்டில் பள்ளி மாணவ, மாணவியர்களின் மேல் படிப்பிற்காக இரண்டு லட்சம் ரூபாய் நிதியுதவி, மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தங்களை ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் வழங்கினார். நிகழ்வில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மேயர் சு.நாகரத்தினம், பகுதி கழக செயலாளர் குறிச்சி என்.தண்டபாணி, மாமன்ற உறுப்பினர் கீதாஞ்சலி செந்தில்குமார், வட்ட செயலாளர் கே.டி.மகேஸ்வரன், சாகுல் அமீது, வேணுகோபால், சந்தை சங்கர், சுசீந்திரன், கோச்சடையான், சத்யா, காயத்ரி, பரமேஸ்வரி, ரேவதி, மலர்கொடி உள்ளிட்ட பலர் உள்ளனர்.